# துவாக்குடி நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of Council</th></tr>
<tr><td>17.05.2018</td><td></td><td>2018–ம் ஆண்டு மே மாதம் 17–ம் தேதி திங்கள் கிழமை மாலை 04.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.<br><br>தனி அலுவலர்,<br>துவாக்குடி நகராட்சி.</td><td></td></tr>
<tr><td>17.05.2018</td><td>174</td><td><u>பொருள் எண். 1</u><br>2018–19ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி (TURIP 2018–19) திட்டத்தின் கீழ் பழுதடைந்த தார் சாலைகளை புதுப்பிக்கவும் மற்றும் புதிதாக தார்சாலைகள் அமைக்கவும் கீழ்கண்ட பணிகளுக்குரிய மதிப்பீடுகள் தயார் செய்து மான்யம் பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வார்டு எண்</th><th>சாலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>9, 10, 11 மற்றும் 15</td><td>காட்டுமாரியம்மன் கோவில் தெரு, சமூக நலக்கூடம் சாலை மற்றும் முத்துராமலிங்க தேவர் சாலையில் தார்சாலை அமைத்தல், மற்றும் அய்யனார்கோவில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதி குறுக்குத் தெருக்கள், வசந்தம் நகர் 1, 2, 3 மற்றும் 4 தெருக்கள், பட்டம்மாள் கோவில் சந்து மற்றும் அண்ணாநகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல்</td><td>100.00</td></tr>
</table>
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ1 / 800 / 2018</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>17.05.2018</td>
<td>175</td>
<td><u>பொருள் எண். 2</u><br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி துவாக்குடி நகராட்சியில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகள்போக மீதமுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மதிப்பீடுகள் தயார்செய்து கருத்துரு வழங்க கோரியதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம் (TUFIDCO) மூலம் வட்டி இல்லா கடனாக பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>நகராட்சியின் மொத்த வரிவிதிப்புகள்</td><td>8392</td></tr>
<tr><td>நகராட்சியின் மொத்த வீடுகள்</td><td>10894</td></tr>
<tr><td>வழங்கப்பட வேண்டிய மொத்த இணைப்புகள்</td><td>6808</td></tr>
<tr><td>ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள்</td><td>3728</td></tr>
<tr><td>தற்போது வழங்க வேண்டிய குடிநீர் இணைப்புகள்</td><td>3080</td></tr>
<tr><td>மதிப்பீட்டுத்தொகை</td><td>110.00 இலட்சம்</td></tr>
</table>
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ1 / 485 / 2018</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.05.2018</td>
<td>176</td>
<td><u>பொருள் எண். 3</u><br>இந்நகராட்சி கணினி சேவை மையத்திற்கு தேவையான கணினி மைய ரசீதுகள் 33001 முதல் 53000 வரை எண் கொண்ட 10000 ரசீதுகள் அச்சிட்டமைக்கு தொகை ரூ. 29500/– மட்டும் வழங்க கோரி பில் பட்டியல் தமிழ்நாடு கூட்டுறவு அச்சகம், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது, மேற்படியான நிறுவனத்திற்கு தொகை ரூ. 29500/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். எச்1 / 316 / 2018</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.05.2018</td>
<td>177</td>
<td><u>பொருள் எண் 4</u><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (WS2) GO Ms. No 39 நாள் 17.04.2018 தேதியின் அரசாணையின் படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்படும் கூட்டு குடிநீர் திட்டத்தின் வாயிலாக நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீருக்கு இதுரை ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.4.50/–வீதம் வசூலிக்கப்பட்டு வந்த நிலையில் இனிவரும் காலங்களில் அதாவது 1.12.2017 முதல் 31.3.2018 வரைக்கு 1 கிலோ லிட்டருக்கு ரூ.9.00/– வீதம் செலுத்த வேண்டும் எனவும், அதற்கு அடுத்த ஆண்டிற்கு 5% உயர்த்தி அதாவது 1.04.2018 முதல் 31.3.2018 வரைக்கும் 1 கிலோ லிட்டருக்கு ரூ.9.45/1000 லிட்டர் கணக்கிட்டு செலுத்த வேண்டும் எனவும், அதே போல் ஒவ்வொரு</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வருடமும் 5% உயர்த்தி குடிநீர் கட்டணம் செலுத்த வேண்டும் என பார்வையில் காணும் அரசாணையில் தெரிவித்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட அரசாணையை நடைமுறைப்படுத்தும் விதமாக மேலாண்மை இயக்குநர் (FAC) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்களின் கடிதம் எண் F.31810/Tariff Revision / AEII/ o&m/2017 நாள் **24.4.2018** தேதிய கடிதத்தின் அடிப்படையில் உத்திரவினை செயல்படுத்து விதமாக நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பாரமரிப்புக்கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண் அ**2/2018–19**/ நாள் **2.5.2018** படி ஏப்ரல் **2018**ம் மாதத்திற்கு துவாக்குடி நகராட்சிக்கு சப்ளை செய்யப்பட்ட **88116** கிலோ லிட்டர் குடிநீருக்கு ரூ.**9.45/1000** லிட்டர் வீதம் ரூ.**832696/–** செலுத்துமாறு தெரிவித்து கேட்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>எனவே, அரசானை எண்39 MA&WS நாள் **17.04.2018**ன் படி மாற்றி அமைக்கப்பட்டுள்ள குடிநீர் கட்டணத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துவதற்கும்,அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அ.கு:-**<br>**1)** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>2) அரசாணை எண் 39 MA&WS நாள் **17.4.2018** ன் படி **1.4.2018**ம் தேதி முதல் மாற்றி அமைக்கப்பட்ட விலை விகித்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் செலுத்த அனுமதிக்கலாம்<br>3) அரசாணையின் படி இனிவரும் காலங்களில் ஒவ்வொரு வருடத்திற்கும் கூடுதலாக 5% உயர்த்தி குடிநீர் கட்டணம் வெலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். இ1 / 556 / 2018** | |
| 17.05.2018 | 178 | **<u>பொருள் எண் 5</u>**<br>திருவெறும்பூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் **2017–18** ம் ஆண்டிற்கு துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் பணிகள் மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். செ.மு.ஆ.எண். **1814/2017**/அ**3** நாள். **23.01.2018** – ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை **09.02.2018–**ம் தேதி தினத்தந்தி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்தின் பில் பட்டியல் ரூ. **3360/–** தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1 / 752 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 17.05.2018 | 179 | **<u>பொருள் எண் 6</u>**<br><br>துவாக்குடி நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பில் உள்ள பழுதடைந்த தெருவிளக்கு உபகரணங்கள் பொது ஏலம் விடுவது தொடர்பான ஏல விளம்பரத்தினை 17.03.2018–ம் தேதி மாலை மலர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்தின் பில் பட்டியல் ரூ. 1462/– தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1 / 428 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

_____________ X _____________